**அக்மீமன பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட 18 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர நிதிக்கூற்றுக்களில் அக்மீமன பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்டிருந்த ரூபா 8,643,077 தொகையான கடன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 சனவரி 01 முதல் பெப்ரவரி 12 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,087,719 தொகையான செலவினம் மாத்திரம் மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளூராட்சி மன்ற ஒய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,072,087 ஆன பங்களிப்புத் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 21,241,687 கூட்டுத்தொகையான 10 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றின் துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளுக்கிடையே ரூபா 7,718,375 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) வீட்டு வாடகை வைப்புக்கள் ரூபா 7,960 மற்றும், கேள்வி வைப்புக்கள் ரூபா 138,330 ஆலும் குறைத்து, வைப்புக்கள் ரூபா 6,113,795 ஆலும் அதிகரித்து

போலியாக சீராக்கப்பட்டு பொது வைப்புக்கள் பதிவேட்டின் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களின் மீதி ஒன்றுக்கொன்று சமப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 4,000 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதிக்கு உரிய சீராக்கம் செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அக்கணக்கின் மீதி ரூபா 5,600 வரை அதிகரித்திருந்தது.

### 1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 305,381 ஆன முத்திரைக் கட்டணங்கள் மற்றும் ரூபா 677,360 ஆன நீதிமன்றத் தண்டப்பண மீதிகள், ரூபா 165,000 ஆன வீதி விளக்குகள் பராமரிப்பு மீளளித்தலாக பெறவேண்டிய மீதிகளும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 58,629,346 தொகையான கடன்பட்டோர் மீதிகளை இனங்கண்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் முன்கொண்டு வரப்படும் ரூபா 398,175 தொகையான நானாவிதக் கடன்பட்டோர் மீதிகளும் 2011 முதல் 2014 வரையான ரூபா 232,824 ஆன கணக்காய்வுக் கட்டணங்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 19,689,715 கூட்டுத்தொகையான மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டில்கள் தொடர்பாக வாகன அட்டவணைகளும், ரூபா 8,643,077 தொகையான உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தொடர்பான கோவைகள், உடன்படிக்கைகளும் மீதி உறுதிப்படுத்தல்களும், ரூபா 145,725 தொகையான அறவிடக்கூடிய பயன்பாட்டு சேவைகள் முற்பணங்களும் ரூபா 1,386,500 கூட்டுத்தொகையான சபையின் முற்கொடுப்பனவுகள் மற்றும் ரூபா 7,925,555 கூட்டுத்தொகையான பொது வைப்புக்கள் தொடர்பான பட்டோலைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டமையால் அவற்றைக் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசீலிக்க முடியவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இனங்காமை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 371 (2) (ஆ) மற்றும் (ஈ) | 1997 முதல் 2009 வரையான காலப்பகுதியில் 23 சந்தர்ப்பங்களில் 06 நபர்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 301,500 கூட்டுத்தொகையான முற்பணங்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ii) நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | சபைக்குச் சொந்தமான 17 வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விட கூடிய வருமானம் ரூபா 17,942,266 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் சபையின் மீண்டுவரும் செலவினை விட கூடிய வருமானம் ரூபா 3,454,571 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 14,487,695 ஆன அதிகரிப்பு தென்பட்டது.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் மீண்டுவரும் வருமானம் மற்றும் செலவினத்தை ஒப்பிடும் போது நான்கு நிகழ்ச்சித்திட்டங்களில் வருமானத்தை விஞ்சிய செலவினம் அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் ரூபா 16,000,000 ஆன மூலதன வருமானம் மற்றும் ரூபா 29,750,000 மூலதனச் செலவினம் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மூலதன வருமானத்தை விஞ்சிய செலவினம் தொடர்பாக நிதி வழங்கப்பட்ட முறை தெளிவுபடுத்தப்படவில்லை. உள்ளவாறான மூலதன வருமானம் ரூபா 4,502,519 மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 8,673,473 ஆக இருந்தமையால் மூலதன வருமானத்தை விஞ்சி ரூபா 4,170,954 ஆன மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வருமான உதவிகளின் பெறுவனவு சதவீதம் அதிகரித்திருந்ததுடன் அது மீண்டுவரும் செலவினத்திற்கு ஒப்பாக மீண்டெழும் வருமானம் அதிகரிப்பதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான மானியம் | சுய வருமான ஈட்டல் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய வருமான ஈட்டல் வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 64,089,142 | 28,030,220 | 36,058,922 | 46,146,875 | 10,087,953 |
| 2014 | 48,990,701 | 15,318,434 | 33,672,267 | 45,536,129 | 11,863,862 |
| 2013 | 42,199,592 | 12,587,511 | 29,612,081 | 39,581,906 | 9,969,825 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒவ்வொரு ஆண்டிலும் சபையின் சுய வருமான ஈட்டல்களிலும் வருமான உதவிகளின் பெறுவனவுகளிலும் அதிகரிப்பொன்று தென்பட்ட போதிலும், சபையின் மீண்டெழும் செலவினங்கள் தொடர்ச்சியாக அதிகரக்கும் வேகத்தில் அதிகரித்திருந்தன.

(ii) சபைக்கு வருமான மானியம் கிடைக்காமல் இருந்தால் சபையின் வருமானத்திலிருந்து மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு எந்தவகையிலும் இயலுமையும் இல்லையென தென்பட்ட போதிலும், மீண்டுவரும் செலவினத்தை குறைத்துக் கொள்வது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வீத வரி மற்றும் ஏக்கர் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 7,852,917 தொகையில் ரூபா 2,516,614 அதாவது 32 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிலுவை ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 5,336,303 வரை அதிகரித்திருந்தது.

நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(அ) மற்றும் 159(1) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டிற்காக ரூபா 330,857 ஆன ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், ஆண்டில் ரூபா 50 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.2 வாடகை

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதி திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 608,879 வரை 20 சதவீதத்தை விஞ்சிய சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணமாக ரூபா 817,569 உம் முத்திரைக் கட்டணமாக ரூபா 37,957,746 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பினை அனுப்பாமையால் 2003 சனவரி முதல் 2012 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 140,457 ஆன மிகை அறவீடு செலுத்த நேர்ந்த போதிலும், அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய 02/2011 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்த வேண்டிய போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

#### 3.2.1 அறவிடப்படாது காணப்படும் மீதிகள்

(i) 10 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 384,316 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதேச சபையின் 08 உறுப்பினர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 283,515 ஆன மோட்டார் சைக்கில் கடன் மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.2 பதவியணியினர் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 06 இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் 13 ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களினதும் 11 அமைய மற்றும் சமயா சமய ஊழியர்களுக்கு மிகையொன்று காணப்பட்ட போதிலும் அப்பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இரண்டாம் நிலை சேவை வகையின் 03 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும் வருமான பரிசோதகர் பதவியிலும் நூலகர் பதவியிலும் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.3 காணியை பகிர்தல்**

15 ஏக்கர், 02 ரூட் 9.27 பேர்ச் அளவிலான 383/2013 ஆம் காணி இலக்க திட்ட வரைபடம் மூலம் 187 துண்டுகளாக பிரிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1992 செப்தம்பர் 30 ஆந் திகதிய 3/2/1/10(ii) ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த காணிப்பகுதிக்காக உரித்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) திட்டமிடல் குழுவின் நிபந்தனையின் பிரகாரம் காணி துண்டுகளாக்கப்பட்டிருந்ததுடன் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(iii) காணிகளை துண்டுகளாக்குவதற்குரிய சபையினால் வழங்கப்பட்டிருந்த 07 ஆம் இலக்க நிபந்தனை நிறைவேற்றப்பட்டிருக்கிவல்லை.

**3.2.4 வாகனக் கட்டுப்பாடு**

சபைக்குரிய 13 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரமும் ஒரு வாகனத்திற்கு காப்புறுதி மேவுகையும் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் 17 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) பயிற்சி செயலமர்விற்காக 2015 மார்ச் 27 ஆந் திகதி ரூபா 220,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்குரிய சபையின் அங்கீகாரம், பட்டியல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132(ஓ) பிரிவிற்கு இணங்காத வகையில் சபை நிதியத்திலிருந்து ரூபா 77,000 விழாச் செலவினமாக செலவிடப்பட்டிருந்தது.

**3.4 செயற்திட்ட தாமதம்**

மீளாய்வண்டிற்காக அங்கீகாரம் கிடைத்த ரூபா 1,570,303 பெறுமதியான 03 மதிப்பிடப்பட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

கழிவுப்பொருள் மீள்சுழற்சி செயற்திட்டமொன்றாக ரூபா 03 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அச்செயற்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிளிசரு செயற்திட்டத்தின் மூலம் 2011 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த உபகரணங்களும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையால் சபை வளவில் சிதைவடைந்து காணப்பட்டன.

**4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கிய செலவின விடயமொன்றில் ரூபா 821,000 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும், இன்னுமொரு செலவின விடயமொன்றில் வரையரையை விஞ்சி ரூபா 6,139,046 தொகையான செலவினமும் 06 வருமான விடயங்களில் இலக்கினை அடையாத ரூபா 22,570,754 வருமானமும் இருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருந்ததென அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ நஆவே ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரது (தென்மாகாணம்) சுற்றறிக்கைப் பிரகாரம் முகாமைத்துவம் பொறுப்பு வாய்ந்த நபரொருவரை சுயாதீன உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

(i) ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 05 வாகனங்களை திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற 66 கல்வனைஸ் (GI PIPE) குழாய்களில் 88 குழாய்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் வெளிப்படுத்தப்படவில்லை.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள்**

சபையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த 11 வாகனங்களது உரித்தைச் சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

## 4.4 தீர்வு செய்யப்படாத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட 12 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய பதில்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அது தொடர்பாக மீள விசாரணைகளுக்கு 2016 யூன் 30 ஆந் திகதி அளவிலும் பதில் அனுப்பியிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் 2.2.2 ஆம் பந்தியின் (அ),(ஆ),(ஈ),(ஊ) மற்றும் (எ) வரையான பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) வாகன நிர்வாகம்